# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108518

1. District : மாவட்டம் திருப்பூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 1/2021/AC/TPR | Date: நாள் 05.01.2021

2. (i) Act சட்டம்: Cr.P.C. | Sections பிரிவுகள்: 102

   (ii) Act சட்டம்: Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7 & 8

   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 04.01.2021 | Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 18.45hrs | Time to : நேரம் வரை 21.45hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.01.2021 | Time : நேரம் 14.30hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD VOL I | Time : நேரம் 14.30hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக டைப் செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 km தென்கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண் - | (b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம் திருப்பூர் வடக்கு, திருப்பூர் மாவட்டம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் - | District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. நாகு | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A. ராமசாமி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 16.4.1972 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - | Place of Issue : வழங்கப்பட்ட இடம் -

   (f) Occupation : தொழில் துணை வட்டாட்சியர் இ-பிரிவு மற்றும் சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) | (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) K.D. சிவக்குமார் s/o. தண்டபாணி No. 81, பாரதிதாசன் நகர், ஆசர் மில் பின்புறம், திருப்பூர் (2) ராம்குமார் s/o தேவராஜன் No 285, அறிவொளி நகர், மண்ணரை, திருப்பூர் (3) P. முத்துப்பாண்டி s/o. பரமசிவம் No. 9/3, 4வது வீதி, பாரப்பாளையம், திருப்பூர் (4) M. தனசேகரன், சார் ஆய்வாளர், திருப்பூர் வடக்கு வட்டம், திருப்பூர் (5) C. அருண்குமார் s/o. சின்னசாமி நில அளவை உதவியாளர், கிராமநிர்வாக அலுவலகம், 15-வேலம்பாளையம் திருப்பூர் (6) Y. செந்தில்குமார் கிராம உதவியாளர், திருப்பூர் வடக்கு கிராமம், திருப்பூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் -

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இந்த மனு தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

05/01/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

5/01/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

5/1/2021 – 16.45hrs

Name: பெயர் R. [illegible]
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
[illegible]
திருவாரூர்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 1/2021/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 05.01.2021-ம் தேதி மதியம் 14.30 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது திரு.R.ராசு, துணை வட்டாட்சியர், இ பிரிவு மற்றும் சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் அலுவலகம் ஆஜராகி ஒரு டைப் செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அதன் விபரம் வருமாறு. அனுப்புநர் திரு.R. ராசு, துணை வட்டாட்சியர், இ பிரிவு மற்றும் சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் மாவட்டம். பெறுநர். காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர்.அம்மையீர், பொருள்: திடீர் தணிக்கை – வட்டாட்சியர் அலுவலகம், திருப்பூர் வடக்கு- புகார் மனு வழங்குதல் - தொடர்பாக பார்வை: திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ப.வெ.எண்.73/2021/A7 நாள். 04.01.2021. நேற்று 04.01.2021-ம் தேதி மாலை திருப்பூர் மாவட்டம் திருப்பூர் குமரன் சாலையில் உள்ள திருப்பூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் அரசு பணிகளை செய்வதற்கு பொதுமக்களிடம் கையூட்டாக பணம் கேட்டுப்பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி அலுவலகத்தை 04.01.2021-ம் தேதி மாலை சுமார் 18.45 மணி முதல் 04.01.2021-ம் தேதி

இரவு 21.45 மணி வரை திடீர் தணிக்கை செய்தும், இந்த திடீர் தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்திற்கு வந்திருந்த தனி நபர்களான திருப்பூர், ஆசர் மில், பாரதிதாசன் நகர், கதவு எண்.81 இல் வசிக்கும் தண்டபாணி என்பவரின் மகன் திரு.D.சிவக்குமார், திருப்பூர், மண்ணரை, அறிவொளி நகர், கதவு எண் 285 முகவரியை சேர்ந்த தேவராஜன் என்பவரின் மகன் திரு.D.ராம்குமார், திருப்பூர், பாரப்பாளையம், 4 வது வீதி, கதவு எண் 9/3 சேர்ந்த பரமசிவன் என்பவரின் மகன் P.முத்துப்பாண்டி, திருப்பூர் வடக்கு தாசில்தார் அலுவலக சார் ஆய்வாளர் திரு. M.தனசேகரன், திருப்பூர், 15 வேலம்பாளையம் கிராம நிர்வாக அலுவலகத்தில் தற்காலிக உதவியாளராக பணிபுரியும் சின்னச்சாமி என்பவரின் மகன் திரு.C.அருண் என்ற அருண்குமார் மற்றும் திருப்பூர் டவுன் கிராம உதவியாளர் திரு.Y.செந்தில்குமார் ஆகியோர்களிடமிருந்தும் மேலும் அலுவலக குப்பைக்கூடையில் இருந்தும் கணக்கில் வராத மொத்த பணம் ரூ.60,800/-ம் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ. 60,800/- மற்றும் மேற்படி அலுவலக ஆ2 இருக்கை வருகை பதிவேடு 2021, தொகுப்பூதியர் வருகை பதிவேடு 2021 மற்றும் வருகை பதிவேட்டின் தொகுப்பு 2021 ஆகிய ஆவணங்களின் ஜனவரி மாதத்திற்கான வருகைப்பதிவேட்டின் நகல்கள் சான்றொப்பமிட்டு பெறப்பட்டவைகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் XXXXX R.ராசு, துணை வட்டாட்சியர்,இ பிரிவு மற்றும் சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு),மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,திருப்பூர் மாவட்டம்.நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. Sir, received the above written complaint with enclosures on

05.01.2021 at 14.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.1/2021/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 and 8 of P.C (Amendment) Act 2018 ஒப்பம் xxxx R.கௌசல்யா 5/01/2021 Inspector of Police, V&AC, Tiruppur. திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னிலை: திரு.1) R.ராசு, துணைவட்டாட்சியர், இ பிரிவு, சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் மாவட்டம் 2) திருமதி. R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். இன்று 04.01.2021 ஆம் தேதி மாலை திருப்பூர் மாவட்டம், திருப்பூர் குமரன் சாலையில் உள்ள திருப்பூர் வடக்கு வட்டாச்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் அரசு பணிகளை செய்வதற்கு பொதுமக்களிடம் கையூட்டாக பணம் கேட்டுப்பெறுவதாக கிடைக்கபெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் திருப்பூர் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) திரு.R.ராசு ஆகிய நான், திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. R.கௌசல்யா மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி அலுவலகத்தை இன்று 04.01.2021 ஆம் தேதி மாலை சுமார் 18.45 மணிக்கு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கையின் விவரம் பின்வருமாறு:- திடீர் தணிக்கை சகிதம் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் குமரன் சாலையில் தெற்கு பார்த்து அமைந்திருந்த திருப்பூர் வடக்கு வட்டாச்சியர் அலுவலகத்திற்குள் மாலை சுமார் 18.45 மணிக்கு நுழைந்தபோது அலுவலகத்தின் இடதுபுறம் தெற்கு பார்த்த அமைந்திருந்த அறைக்குள் நுழைந்தபோது மேற்கு பார்த்து அமர்ந்திருந்த திருமதி. C.கௌரி, தலைமையிடத்து துணை வட்டச்சியர் அவர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு அவரை விசாரிக்க அவர் கடந்த

14.12.2020 முதல் மேற்படி அலுவலகத்தில் பணிபுரிவதாகவும், தனது இருக்கையின் அருகே இருந்த கைபையிலிருந்து பணம் ரூ.680/- தானாக எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கபட்டது. மேற்படி இருக்கைக்கு அருகே வடக்கு பார்த்தாற்போல் நின்றிருந்த திரு.K.கிருஷ்ணகுமார் த/பெ. கனகராஜ், 2/2, சாமுண்டிபுரம் தெற்கு, காந்தி நகர் போஸ்ட், திருப்பூர் என்பவரை விசாரிக்க அவர் தனது மனைவி தேவி என்பவர் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய்துறையில் F பிரிவில் பணிபுரிவதாகவும், HIGH COURT சம்பந்தமான FILE -யை திருப்பூர் வடக்கு தாசில்தார் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு. நந்தகுமார் அவர்களிடம் கொடுக்க தானும் தான் மனைவியும் வந்ததாகவும் தான் மனைவி வெளியே கடைக்கு பொருள் வாங்க சென்றுவிட்டதாகவும், மேற்படி file யை நந்தகுமாரிடம் ஒப்படைத்துவிட்டு காத்திருக்குமாறு கூறிவிட்டு சென்றதாகவும், அதனால் தான் நந்தகுமாரிடம் மேற்படி FILE யை கொடுத்தகவும் கூறினார். மேலும் அவரை விசாரிக்க தானாகவே முன்வந்து தனது பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ. 5600/- எடுத்து ஆஜார் செய்தார். இதுகுறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி நபர் அருகே நின்றிருந்த இளநிலை உதவியாளர் திரு. E.நந்தகுமார் என்பவரை விசாரிக்க அவர் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் தேவி என்பவர் அவரது கணவரான கிருஷ்ணகுமார் என்பவரிடம் HIGH COURT ஆஜராக தொடர்பான கோப்பினை பெற்றதாகவும் மேலும் தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்த பார்சிலிருந்து பணம் ரூ.70/- எடுத்து

ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பிறகு தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பதிவறை எழுத்தர் திரு. V. கௌதமன் என்பவரை விசாரிக்க அவர் தானாகவே முன்வந்து தனது சட்டையின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.10/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி நபருக்கு அருகே தெற்கு பார்த்தாற்போல் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த A1 உதவியாளர் திரு. K. சரவணன் என்பவரை விசாரிக்க அவர் தான் 16.06.2018 முதல் இவ்வலுவலகத்தில் பணிபுரிவதாக கூறினார். அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு பின்புறம் இருந்த குப்பை கூடையில் பணம் ரூ.1500/- இருந்தது. இதுகுறித்து விசாரிக்க யாரும் உரிமை கோராததால் மேற்படி பணம் லஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணையின் பொருட்டு மேற்படி பணம் ரூ.1500/- கைபற்றப்பட்டது. மேற்படி நபருக்கு அடுத்த படியாக தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திரு. C. கருப்புசாமி என்பவரை விசாரிக்க அவர் தான் கடந்த 06.03.2019 ஆம் தேதி முதல் மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக கூறி தானாகவே முன்வந்து தனது சட்டையின் இடதுபுற மேல்பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5/- எடுத்து ஆஜார் செய்தார். இது குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையில் நடுவே நின்றுகொண்டிருந்த தனிநபரான திருப்பூர் ஆசர் மில் பின்புறம் உள்ள பாரதிதாசன் நகர், கதவு எண்.81 இல் வசிக்கும் தண்டபாணி

என்பவரின் மகன் சிவக்குமார் என்பவரை விசாரிக்க அவர் தான் சந்திரமோகன் டைப் ஆ.்.பிஸில் வேலை செய்வதாகவும், பட்டா மாறுதல் தொடர்பாக அலுவலரை சந்திக்க வந்ததாகவும் கூறினார். மேலும் அவரிடம் விசாரித்தபோது அவர் தனது இடதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.10,650/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க முன்னுக்குபின் முரணாக கூறியதால் மேற்படி பணம் மேற்படி அலுவலகத்தில் உள்ள அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வந்த பணமாக இருக்க கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணையின் பொருட்டு மேற்படி பணம் ரூ.10,650/- கைப்பற்றப்பட்டது. மேற்படி நபர் அருகே நின்றிருந்த தனி நபரான திரு. D. ராம்குமார், த/பெ. தேவராஜன், கதவு எண் 285, அறிவொளிநகர், மண்ணரை, திருப்பூர் என்பவரை விசாரிக்க அவர் தான் பெஸ்ட் கம்ப்லெக்ஸ் அருகே உள்ள சந்திரமோகன் டைப் ஆ.்.பிஸில் வேலை செய்வதாகவும் பட்டா மாறுதல் தொடர்பாக அலுவலரை பார்க்க வந்ததாகவும் கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் தனது பேண்டின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.14,500/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க முன்னுக்குபின் முரணாக கூறியதால் மேற்படி பணம் மேற்படி அலுவலகத்தில் உள்ள அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வந்த பணமாக இருக்க கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணையின் பொருட்டு மேற்படி பணம் ரூ. 14,500/- கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி நபர் அருகே நின்றிருந்த மற்றொரு தனி நபரான திரு. P.முத்து பாண்டி, த/பெ. பரமசிவம், கதவு எண். 9/3 நாலாவது வீதி, பாரப்பாளையம், திருப்பூர் என்பவரை விசாரிக்க அவர் தான் லட்சுமி டைப் ஆ.்.பிஸில் வேலை செய்வதாகவும் பட்டா மாறுதல்

தொடர்பாக அலுவலரை பார்க்க வந்ததாகவும் கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் தனது பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ. 21,100/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அவர் முன்னுக்குபின் முரணாக கூறியதால் மேற்படி பணம் மேற்படி அலுவலகத்தில் உள்ள அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வந்த பணமாக இருக்க கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணையின் பொருட்டு மேற்படி பணம் ரூ.21,100/- கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி நபர் அருகே நின்றிருந்த தொட்டிபாளையம் கிராம உதவியாளர் திரு. S.விஜயபிரகாஷ் என்பவரை விசாரிக்க, அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கொடுத்த தேர்தல் சம்பந்தமான தபாலினை கட்சி அலுவலகங்களுக்கு சார்வு செய்துவிட்டு அதன் நகலை கொடுக்க வந்ததாக கூறினார். மேற்படி நபரை விசாரிக்க அவர் தானாகவே முன்வந்து பணம் ரூ. 1200/- தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி அறைக்குள் வந்த தனிநபரான திரு. கௌரிசங்கர், த/பெ. தாமோதரன், நெ.5, மகாலட்சுமி கார்டன், திருமுருகன்பூண்டி, திருப்பூர் என்பவரை விசாரிக்க அவர் தான் வாரிசு சான்றிதழ் தொடர்பாக பார்க்க வந்ததாக கூறி தனது சட்டையின் மேல்புற இடது பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.350/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பிறகு மேற்படி மேற்படி அறைக்கு அருகே கிழக்கு பார்த்து இருந்த நில அளவை பிரிவு அலுவலகத்திற்குள் நுழைந்தபோது

வடக்கு பார்த்து அமர்ந்திருந்த திருப்பூர் வடக்கு சார் ஆய்வாளர் திரு. M. தனசேகரன் என்பவரை விசாரிக்க அவர் தானாக முன்வந்து தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5450/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அவர் முன்னுக்குபின் முரணாக கூறியதால் மேற்படி பணம் லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணையின் பொருட்டு மேற்படி பணம் ரூ.5450/- கைபற்றப்பட்டது. மேலும் அவர் அருகே கிழக்குப்பார்த்து அமர்ந்திருந்த 15, வேலம்பாளையம் பிர்கா சர்வேயர் திரு. D.கார்த்தி என்பவரை விசாரிக்க அவர் தானாகவே முன்வந்து தனது பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.640/- எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து விசாரிக்க மேற்படி பணம் தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் அருகே நின்றிருந்த மேற்படி அலுவலகத்தின் இரவு காவலர் திரு. அன்வர் பாட்ஷா என்பவரை விசாரிக்க அவர் தனது இடதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1880/- எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து விசாரிக்க மேற்படி பணம் தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், மேற்படி அறைக்குள் நின்றிருந்த 15 வேலம்பளையம் VAO அலுவலகத்தில் தற்காலிக உதவியாளராக பணிபுரியும் சின்னச்சாமி மகன் C. அருண் என்பவரை விசாரிக்க அவர் மேற்படி 15 வேலம்பளையம் கிராம உதவியாளரின் விடுப்பு கடிதம் கொடுக்க வந்ததாகவும் கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் தானாகவே முன்வந்து தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5450/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அவர் முன்னுக்குபின் முரணாக கூறியதால் மேற்படி பணம்

லஞ்சப்பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணையின் பொருட்டு மேற்படி பணம் ரூ.5450/- கைபற்றப்பட்டது. அடுத்து, மேற்படி அறைக்குள் நின்றிருந்த செட்டிபாளையம் கிராம உதவியாளர் திரு. C.முருகன் என்பவரை விசாரிக்க அவர் தபால் கொடுக்க வந்ததாகவும் கூறி அவர் தனவே முன்வந்து தனது சட்டையின் இடதுபுற மேல்பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1530/- எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து விசாரிக்க மேற்படி பணம் தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி அறையில் இருந்த தனிநபரான திருப்பூர் இடுவம்பளையம் மூகாம்பிகை நகர் கதவு எண் 2/830 யை சேர்ந்த திருமூர்த்தி மகன் திரு.மதன்குமார் என்பவரை விசாரிக்க அவர் தனவே முன்வந்து தனது சட்டை.யின் இடதுபுற மேல்பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.50/- எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து விசாரிக்க மேற்படி பணம் தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி அறைக்குள் நின்றிருந்த தனி நபரான குளத்துபாளையம், கதவு எண்.2/164 இல் வசிக்கும் ஜெயவேல் மகன் முத்து என்பவரை விசாரிக்க அவர் தான் மேற்படி அலுவலகத்தில் நில அளவை பிரிவில் தலைமை சர்வேயர் திருமதி.பாரதி அவர்களுக்கு உதவியாக தற்காலிகமாக பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு மாத சம்பளமாக திருமதி. பாரதி அவர்கள் பணம் ரூ.3000/- கொடுப்பதாகவும் கூறி தனது சட்டையின் இடதுபுற மேல்பக்கெட்டிலிருந்து பணம் ரூ.1290/- எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து விசாரிக்க மேற்படி பணம் தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனை

நடந்துகொண்டிருந்தபோது திருப்பூர் டவுன் கிராம உதவியாளர் திரு. செந்தில்குமார் என்பவர் அலுவலகத்திற்குள் நுழைந்தவரை விசாரிக்க அவர் தானாகவே முன்வந்து தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.2150/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அவர் முன்னுக்குபின் முரணாக கூறியதால் மேற்படி பணம் லஞ்சமாக பெற்ற பணமாக இருக்குக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணையின் பொருட்டு மேற்படி பணம் ரூ.2150/- கைபற்றப்பட்டது. மேற்படி அலுவலக பதிவேடுகள் குறித்து தலைமையிடத்து துணை வட்டச்சியார் திருமதி. கௌரி அவர்களிடம் விசாரிக்க அவர் இவ்வலுவலக ஆ2 இருக்கை வருகை பதிவேடு 2021, தொகுப்பூதியர் வருகை பதிவேடு 2021 மற்றும் வருகை பதிவேட்டின் தொகுப்பு 2021 ஆகியவற்றினை எடுத்து ஆஜர் செய்தார். பிறகு மேற்படி ஆவணங்களின் ஜனவரி மாதத்திற்கான வருகை பதிவேட்டினை நகல் எடுத்து மேற்படி தலைமையிடத்து துணை வாட்டச்சியார் திருமதி. கௌரி அவர்களிடம் சான்றொப்பம் பெற்று கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது கணக்கில் வராத மொத்த பணம் ரூ.60,800/- விசாரணையின்பொருட்டு கைப்பற்றபட்டது. மேலும் கொடிநாள் வசூல் குறித்து தலைமையிடத்து துணை வட்டாச்சியரிடம் விசாரித்தபோது அவர் இவ்வலுவலகத்தில் கொடி நாள் வசூல் ஏதுமில்லை என்று கூறினார். இந்த திடீர் தணிக்கையானது 04.01.2021 ஆம் தேதி மாலை சுமார் 18.45 மணிக்கு துவங்கி 04.01.2021 ஆம் தேதி 21.45 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையானது மடிக்கணினியில் தலைமை காவலர் 1799, திரு. அசோகன் என்பவரால் தட்டச்சு செய்யபட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது அரசு அலுவலர்களையும் மற்ற நபர்களையும்

கண்ணியத்துடன் நடத்தப்பட்டனர். பெண் அலுவலரை காவல் ஆய்வாளரால் தணிக்கை செய்யபட்டனர். இந்த திடீர் தணிக்கை நடவடிக்கை கீழ்கண்ட நபர்களால் கையெழுத்து செய்யப்பட்டது. ஒப்பம் XXXX R.ராசு, துணைவட்டாட்சியர், இ பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர். கொ.சரவணன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், அ1, திருப்பூர், D. சிவக்குமார், D.ராம்குமார், P.முத்துப்பாண்டி, மா.தனசேகரன், சார்ஆய்வாளர், திருப்பூர் வடக்கு, அருண் @ C. அருண்குமார், தற்காலிக கிராம உதவியாளர், Y.செந்தில்குமார், கிராம உதவியாளர், திருப்பூர் டவுன், ச.கௌரி, தலைமையிடத்து துணைவட்டாட்சியர், திருப்பூர் வடக்கு, A.அசோகன், HC-1799,V & AC, திருப்பூர் மற்றும் R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். நான் மேற்கண்ட புகாரினையும் செயல் முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.60,800/-ஐயும், இன்று 05.01.2021-ம் தேதி 14.30 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.01/2021/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 and 8 of Prevention of Corruption (Amendment) Act 2018 கீழ் 15.00 மணிமுதல் 16.00 மணி வரை வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள், திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை மற்றும் பணம் ரூ.60,800/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

R. [signature] 5/1/2021
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு பிரிவு,
திருப்பூர்.